நாள்: 21.09.2024
OS.260/2020
பெயர்: அறிவாளன்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் முதலில் சிங்கப்பூரில் இருந்தேன். இப்பொழுது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். என் வருமானத்தைக் காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் விவசாயம் செய்து வரும் நிலத்தின் சொத்து உரிமையைக் காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் சொத்தை விவசாயம் செய்து வருகிறேன். என் தகப்பனாருக்கு சொத்து உள்ளது என்பதைக் காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பாரத ஸ்டேட் பேங்க், பெடரல் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றில் வங்கி கணக்கு உள்ளது. என்னுடைய மாத வருமானத்தை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 02.07.2014ம் தேதிய வரவு செலவின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லக்கூடிய தேதியில் என் கைவசம் பணம் இருந்தது என்பதைக் காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 02.07.2014ல் வங்கி பரிவர்த்தனை சம்மந்தமாக கணக்கு பட்டியல் என்னிடம் உள்ளது. ஆனால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மணிகண்டன் என்னிடம் எப்பொழுது பணம் கேட்டார் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 02.07.2014ம் தேதி கேட்டவுடன் பணம் கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அவர் பணம் என்னிடம் கேட்டார். மேற்படி சங்கதியை என்னுடைய பிராது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 02.07.2014ல் பணம் கொடுத்தபோது யார் உடன் இருந்தார் என்றால் நான், நண்பர் சபரி, மணிகண்டன், லதா ஆகியோர்கள் இருந்தார்கள். 02.07.2014ம் வருடம் 2 மாதங்களுக்கு முன்பு மணிகண்டன் என்னிடம் ரூ.6 லட்சம் கடன் பெற்றிருந்தார். ரூ.6 லட்சம் கடன் வாங்கும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், மணிகண்டன், ரோகமணி, என் நண்பர் சபரி ஆகியோர்கள் இருந்தார்கள். இரண்டு புரோநோட்டுக்களையும் சபரி தான் எழுதினார். ரூ.6 லட்சத்திற்கான புரோநோட்டில் ரோகமணி கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் முன்பு தான் கையொப்பம் போட்டார். 2-வது புரோநோட்டிலும் ஜெகநாதன் சாட்சியாக கையொப்பம் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 புரோநோட்டில் ஜெகநாதன் தமிழில் கையொப்பம் போட்டுள்ளார். வக்காலத்தில் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டுள்ளார். நான் ஜெகநாதன் கையெழுத்தை நிரூபணம் செய்ய தயாராக

உள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் தாவா வழக்கில் கண்ட புரோநோட்டில் உள்ள கையொப்பத்தை மறுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மணிகண்டன் குடும்ப செலவிற்காக பணம் வாங்கியிருந்தால் அவரது மனையிடமும், மகனிடமும் புரோநோட்டில் ஸ்டாம்பின் மீது கையொப்பம் வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட்டில் பிரதிவாதிகள் கையொப்பம் போடவில்லை என்றும், ஜெகநாதன் சாட்சியாக கையொப்பம் பொடவில்லை என்றும், நான் வழக்கு புரோநோட்டை உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மணிகண்டன் பாத்தியப்பட்ட சொத்தை நான் குறைந்த விலைக்கு வாங்க வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பட்டாவை ஆவணங்களை சரிபார்க்க வாங்கிக்கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட்டை மணிகண்டன் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் எந்தவித வரவு செலவும் நடக்கவில்லை என்றும், புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், என்னால் உற்பத்தி செய்யப்பட்ட புரோநோட்டின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மணிகண்டன் என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு புரோநோட்டு எழுதிக்கொடுக்காத நிலையில் நான் உற்பத்தி செய்த புரோநோட்டின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.